# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1784/24 - 2012 නොවැම්බර් මස 16 වැනි සිකුරාදා - 2012.11.16

*1784/24 ஆம் இலக்கம் – 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

### *2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித் தொழில் சட்டம்*

*2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித் தொழில் சட்டத்தின் பிரிவு 12 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்பு.*

*நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்,*
*நாணயச்சபை தலைவர் மற்றும்*
*இலங்கை மத்திய வங்கியின்*
*ஆளுநர்.*

*கொழும்பு,*
*2012, செத்தெம்பர் 28.*

### *2012 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி வீதங்கள்) பணிப்புரை*

*1. இப்பணிப்புரை 2012 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் (வட்டிவீதங்கள்) பணிப்புரை என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன் 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் ஏற்புடைத்தாதனவாதலும் வேண்டும்.* எடுத்துக்காட்டல்.

*2. நிதிக் கம்பனியொன்றினால் 2012 ஆம் ஆண்டு ஒத்தோபர் மாதம் 1 ஆந் திகதிக்கு பின்னர் ஏற்றுக் கொள்ளப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட தவணை வைப்புக்களின் மீது செலுத்தப்படக்கூடிய ஆகக்கூடிய ஆண்டு வட்டி வீதம், பின்வருவனவற்றை விஞ்சக் கூடாது.* ஆகக்கூடிய வட்டி வீதம்.

*2.1 அத்தகைய வைப்பு 12 மாத கால அல்லது அதற்குக் குறைவான முதிர்ச்சியினைக் கொண்டிருந்தால் 2012, செத்தெம்பர் 30 ஆந் திகதி முடிவடைந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு (இதன் பிறகு பணிப்பாளரினால் அறிவிக்கப்படுவாறான காலாண்டு பகுதியில் திறைசேரி உண்டியல்களுக்கு பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு) 2.00 சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு.*

*2.2 அத்தகைய வைப்பு 12 மாதங்களுக்கு மேற்பட்ட முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்டிருந்தால் 2012, செத்தெம்பர் 30 ஆந் திகதி முடிவடைந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு (இதன் பிறகு பணிப்பாளரினால் அறிவிக்கப்படுகின்றவாறான காலாண்டு பகுதியில் திறைசேரி உண்டியல்களுக்கு பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு)3.00 சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு.*

2.3 2012.06.01 ஆந் திகதியன்று ஐம்பத்தைந்து (55) வயதினை கடந்த நபர்களிடமிருந்து (இதன் பின்னர் "முத்த பிரஜைகள்" என குறிப்பிடப்படும்) ஏற்றுக்கொள்ளும் அல்லது புதுப்பிக்கும் தவணை வைப்புக்கள் தொடர்பில், நிதிக் கம்பனியொன்று பந்தி 2.1 அல்லது 2.2 இல் குறிப்பிட்டவாறான வட்டி வீதத்திற்கு மேலதிகமாக ஒரு சதவீத புள்ளியினை வழங்கலாம்.

3. நிதிக் கம்பனியொன்றினால் முதிர்ச்சியின் போதான மீட்புப் பெறுமதியினை விடக் குறைவான விலையில் 2012 ஆம் ஆண்டு ஒத்தோபர் மாதம் 1 ஆந் திகதிக்கு பின்னரான பரிமாற்றத்தகாத வைப்புச் சான்றிதழின் விற்பனையின் போது அனுமதிக்கக்கூடிய ஆகக்கூடிய கழிவு வீதமானது அந்த சாதனத்தின் மீதான ஆகக்கூடிய ஆண்டு வருவாய்.

3.1 பரிமாற்றத்தகாத வைப்புச் சான்றிதழ் 12 மாத காலம் அல்லது அதற்கு குறைவான முதிர்ச்சியினைக் கொண்டிருந்தால் 2012, செத்தெம்பர் 30 ஆந் திகதி முடிவடைந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு (இதன் பிறகு பணிப்பாளரினால் அறிவிக்கப்படுகின்றவாறான காலாண்டு பகுதியில் திறைசேரி உண்டியல்களுக்கு பிரயோகிக்கப்படும் நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு) 2.00 சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும்.

3.2 பரிமாற்றத்தகாத வைப்புச் சான்றிதழ் 12 மாதங்களுக்கு மேற்பட்ட முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்டிருந்தால் 2012, செத்தெம்பர் 30 ஆந் திகதி முடிவடைந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு (இதன் பிறகு பணிப்பாளரினால் அறிவிக்கப்படுகின்றவாறான காலாண்டு பகுதியில் திறைசேரி உண்டியல்களுக்கு பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு) 3.00 சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும் விஞ்சாத வகையில், அத்தகைய முறி சம்பந்தமாக வழங்கப்படக்கூடிய வீதம் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

4. நிதிக் கம்பனியொன்றினால் எந்தவொரு சேமிப்பு வைப்பு மீதும் செலுத்தக்கூடிய ஆண்டொன்றிற்கான ஆகக்கூடிய வட்டி வீதமானது 2012, செத்தெம்பர் 30 ஆந் திகதி முடிவடைந்த காலாண்டுப் பகுதியில் 91 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் நிறையேற்றப்பட்ட சராசரி வருவாயினை (இதன் பிறகு பணிப்பாளரினால் அறிவிக்கப்படுகின்றவாறான காலாண்டு பகுதியில் திறைசேரி உண்டியல்களுக்கு பிரயோகிக்கப்படும் நிறையேற்றப்பட்ட சராசரி வருவாயினை) விஞ்சக்கூடாது.

5. எப்படியிருப்பினும், மூத்த பிரஜைகளினால் பேணப்படும் சேமிப்பு வைப்புக்கள் தொடர்பில், 2012, செத்தெம்பர் 30 ஆந் திகதி முடிவடைந்த காலாண்டு பகுதியில் 91 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு (இதன் பிறகு பணிப்பாளரினால் அறிவிக்கப்படுகின்றவாறான காலாண்டு பகுதியில் திறைசேரி உண்டியல்களுக்கு பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு) மேலதிக வட்டியாக ஒரு சதவீத புள்ளியினை நிதிக் கம்பனி வழங்கலாம்.

அறிக்கையிடல்.

6. ஒவ்வொரு நிதிக் கம்பனியும் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட படிவத்தில் ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்ட வட்டி வீதங்களின் விபரங்களையும் வைப்புச் சான்றிதழின் கழிவு வீதங்களின் விபரங்களையும் உள்ளடக்கிய அறிக்கையொன்றினை அத்தகைய நிதிக் கம்பனி, அடுத்துவரும் மாதத்தின் 7 ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பணிப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

வரைவிலக்கணம்.

7. இப்பணிப்பில் -

7.1 "தவணை வைப்புக்கள்" என்பது குறிப்பிட்ட காலத்திற்கு பின்னர் மீள்செலுத்தப்படும் ஒப்பந்தத்தின் கீழ் நிதிக்கம்பனியால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏதேனும் ஒரு வைப்பினை குறிக்கும்; அத்துடன்

7.2 "பணிப்பாளர்" என்பது, இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிக்கும்.

7.3 31 மாச்சு, 30 யூன், 30 செத்தெம்பர் மற்றும் 31 திசெம்பர் போன்ற திகதிகளில் முடிவுறும் காலாண்டுப்பகுதிகளுக்கான, 91 நாட்கள் மற்றும் 364 நாள் காலாண்டிற்குரிய திறைசேரி உண்டியல்களுக்கு பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்கள் பணிப்பாளரினால் வழங்கப்படும்.

மீளப்பெறுகை.

8. 2012.06.29 ஆந் திகதியிடப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டிவீதங்கள்) பணிப்புரை இத்தால் மீளப் பெறப்படுகின்றது.

11- 1159

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.